செ.வெ.எண் : 17 நாள்: 8-11-2017

# பத்திரிகை செய்தி

## அம்மா திட்டம் - 4 வது கட்டம்

நீலகிரி மாவட்டத்தில் 24-07-2015 முதல் "அம்மா திட்டம்" நான்காவது கட்டமாக பிரதி வாரம் வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. இதில் முதியோர் ஓய்வூதிய தொகை, விதவை உதவித்தொகை, நலிந்தோர் உதவித்தொகை, உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உதவித்தொகை, புதிய உழவர் அட்டை, வருவாய்த்துறை மூலம் வழங்கப்படும் வருமான சான்று, சாதி சான்று, விதவை சான்று மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பெயர் சேர்த்தல், நீக்குதல் போன்ற மக்கள் நலப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத்துறை, சமூக நலத்துறை, மின்வாரியம், மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்ந்த குறைகளை கேட்டு குறை நிவர்த்தி செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் தேனீ வளர்ப்பு, வீட்டு தோட்டம், தோடர் எம்ராய்டரி, நாட்டு கோழி வளர்ப்பு, உலர்கலம், செங்கல் சூளை, காப்பி / தேயிலை தோட்டம், விதை சேகரிப்பு பண்ணை, வீடுபழுது பார்த்தல், கறவைமாடு, செவிலியர் பயிற்சி, சமையல் கலை பயிற்சி, கோத்தர்களுக்கான மண்பாண்டம் செய்யும் இயந்திரம், பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் இயந்திரம், சேகரிப்பு மற்றும் விற்பனை மையம் போன்றவற்றிற்கு விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. எனவே, பொதுமக்கள் தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டத்தில் 2017 நவம்பர் மாதம் 10.11.2017 (இரண்டாம் வெள்ளிக்கிழமை) கீழ்கண்ட இடங்களில் அம்மா திட்டம் நடைபெற உள்ளது. எனவே, இப்பகுதி மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

10.11.2017

| வ.எண் | வட்டம் | கிராமம் | முகாம் நடைப்பெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | உதகை | எப்பநாடு- 1 | சமுதாயக்கூடம், கெங்கமுடி |
| 2 | குன்னூர் | பர்லியார் | அரசு ஆரம்பப்பள்ளி, பர்லியார் |
| 3 | கோத்தகிரி | நெடுகுளா- 1 | சமுதாயக்கூடம், சேலக்கொரை |
| 4 | குந்தா | கிண்ணக்கொரை | சமுதாயக்கூடம், காமராஜ்நகர் |
| 5 | கூடலூர் | கூடலூர்- 1 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, ஏழுமரம் |
| 6 | பந்தலூர் | சேரங்கோடு- 1 | அரசு உண்டு உறைவிடப்பள்ளி, அய்யங்கொல்லி |

ஒம்/-
மாவட்ட ஆட்சியர்
நீலகிரி மாவட்டம்.

/உ.ந.உ.ப/

மாவட்ட ஆட்சியருக்காக,
நீலகிரி மாவட்டம்.